## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;...

ஏசாயா 9:6




செய்தி மலர்
2020
டிசம்பர்

இதழ் : 08
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த நவம்பர் மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் டிசம்பர் மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

திருச்சபை குடும்பத்தினர் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்து பிறப்பு தின வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவிக்கிறேன். சமாதானத்தின் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் இந்த கிறிஸ்மஸ் நாட்களிலே அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

இயேசு பிறந்தபொழுது நட்சத்திரத்தை பார்த்த சாஸ்திரிகள் தவறுதலாக ஏரோதுவின் அரண்மனைக்கு சென்று ஏதாவது குழந்தை பிறந்திருக்கிறதா? என்று விசாரித்தார்கள். காரணம் உலகத்தை ஆளப்போகிற பிரபு தோன்றினார் என்பதைக் குறிக்கும் விதத்தில் இந்த நட்சத்திரம் வந்திருப்பதாகவும் அப்படிப்பட்ட குழந்தை ஏரோதுவின் அரண்மனையில்தான் பிறந்திருக்க வேண்டும் என்று தாங்கள் கணித்ததாகக் கூறினார்கள். இதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற ஏரோது வேதாகம தீர்க்கதரிசனங்களை ஆராய்ச்சி செய்தான். அப்படிக் கிடைத்த தீர்க்கதரிசனங்களை கீழ் வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. இஸ்ரவேலை ஆளப்போகிறவர்.

"எப்பிரத்தா எனப்பட்ட பெத்லகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் இருந்தாலும் இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்தில் இருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா–5:2)

ஆம் பிரியமானவர்களே, பெத்லகேம் ஊரானாகிய தாவீதின் சந்ததியில் இயேசு பிறப்பார் என்று மீகா தீர்க்கதரிசி சொல்லியிருந்தான். தாவீதுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன் என்று கர்த்தரும் சொல்லியிருந்தார்.

 கடவுள் இயேசு என்ற பெயரில் இப்பூலகிற்கு இறங்கி வந்து சகல ஜனங்களின் பாவ வினைகளைப் போக்கும் பரிகாரியாக தன் தூய இரத்தத்தை சிந்தி இரட்சிப்பார். இதன் மூலம் பாவ மன்னிப்பை மனுக்குலத்திற்கு கொடுப்பார். அவரை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்படும் ஜனங்கள் யாராக இருந்தாலும் பரிசுத்தமடைந்து தாவீதின் ஆளுகைக்கு உட்படுவார்கள். அவர்களைத் தான் பரிசுத்த ஜாதி என்றும் அவருக்கு சொந்தமான ஜனமென்றும் வேதம் குறிப்பிடுகிறது. ஒரு நாள் உலகத்திலுள்ள அனைத்து மக்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவார்கள். இயேசு கிறிஸ்து தாமே உலகத்தை ஆளுபவராக சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அல்லேலூயா.

பிரியமானவர்களே, நீங்களும் நானும் அந்த தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களாய் சதா காலமும் நிலைத்திருந்து வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்வோம். இதைத்தான் பேதுரு கூறுகிறார். " நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின் படி இனி நடவாமல் கீழ்படிகிற பிள்ளைகளாயிருந்து உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயிலும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாய் இருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாய் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள். இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். (1-பேது-1:14-16,2:9,10)

## உ. திறக்கப்பட்ட ஒரு ஊற்று..

"அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்" (சகரியா-13:1).

கொல்கதா மலையில் சிலுவை மரத்தில் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஒரு ஊற்று போல புறப்பட்டு வந்தது. யாருக்காக இந்த தியாகம்? யாருக்காக இந்த ஊற்று? யாருக்காக இந்த பலி? இது உங்களுக்காகவும், எனக்காகவும்தான். அந்த திவ்விய ஊற்றில் கழுவப்படுகின்ற பொழுது நாம் பரிசுத்தவான்களாய் மாறி விடுகிறோம். இப்படி இயேசுவின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்ட பிள்ளைகள் எப்பொழுதெல்லாம் இயேசுவின் நாமத்தில் கூடி வருகிறார்களோ அவர்கள் மத்தியிலே இயேசு கிறிஸ்து பிரசன்னமாகிறார். இதைத் தான் இயேசு கிறிஸ்து எங்கும் பிதாவை தொழுது கொள்ளும் காலம் வருகிறது என்று கூறினார். ஆம்

இன்றும் பரிசுத்த ஆவியாகிய ஊற்று நம் சரீரத்தில் ஊற்றப்படுகிறது. இதைத்தான் சகரியா தீர்க்கதரிசி "அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன். அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை. தரிசனம் சொல்லுகிறவர்களையும், அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவேன்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூறினான். (சகரியா-13:2)

சமாரியப் பெண்ணிடத்தில் இயேசு பேசிக்கொண்டிருக்கும்போது "நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னாரென்பதையும் அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார். இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவக் காலமாய் ஊறுகிற நீருற்றாயிருக்கும்" என்றார். (யோவா-4:10,14) இயேசுவின் நாமத்தில் கூடி வருகிறவர்கள் மேலும் விசுவாசிகளின் மேலும் ஊற்றப்படுகிற பரிசுத்த ஆவியைக் குறித்து இயேசு இவ்விதமாய் கூறினார். ஆம் அவர்தான் திறக்கப்பட்ட ஜீவ ஊற்று. அந்த ஜீவ ஊற்றிலிருந்து நாம் வல்லமைகளை பெற்றுக்கொள்ளுகிறோம். பிசாசை வென்று வாழும் வல்லமையை பெற்றுக்கொள்ளுகிறோம். அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் நாம் வாழுகிறோம்.

இதற்காகவே திறக்கப்பட்ட ஊற்றாகிய இயேசு கிறிஸ்து பாலகனாக அவதரித்தார். இன்றும் பரிசுத்த ஆவியானவரை ஊற்றாக நமக்கு தருகிறார். வல்லமையின் கருவிகளாய் நம்மை எடுத்துப் பயன்படுத்துகிறார். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்று உங்களுக்கு சொல்லியிருக்கிறார்(மத்-7:7).

ஆகவே இயேசுவின் இரத்தம் என்னும் ஊற்றினால் கழுவப்பட்டு பரிசுத்தமடைவோம். பரிசுத்த ஆவி என்ற ஜீவ ஊற்றினால் வல்லமையை பெற்றுக்கொள்வோம். சாட்சியான வாழ்க்கை வாழ்ந்து பிசாசை ஜெயித்து அநேகரை ஜீவ ஊற்றாகிய இயேசுவை நோக்கி வழி நடத்துவோம்.

## 3.இருளில் ஒளி...

"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த ஜாதியை திரளாக்கி அதற்கு மகிழ்ச்சியை பெருகப்பண்ணினீர். அறுப்பில் மகிழ்கிறது போலவும், கொள்ளையை பங்கிட்டுக் கொள்ளுகையில் களிகூருகிறது போலவும், உமக்கு முன்பாக மகிழ்கிறார்கள். அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப் போட்டீர்" (ஏசா-9:2-4).

பிசாசு கொண்டு வந்து போடுகின்ற எல்லா இருளையும் பாலகனாய் பிறந்திருக்கிற இயேசு கிறிஸ்து நீக்கிப் போடுவார். பாவம் என்ற இருள் நீங்கி இயேசுவின் இரட்சிப்பின் ஒளி பிரகாசிக்கும், சாபமென்ற இருள் நீங்கி சமாதானம் என்ற வெளிச்சம் பிரகாசிக்கும், பிசாசு பேய் பில்லி சூனியம் போன்ற அந்தகார கட்டுகள் முறிக்கப்பட்டு விடுதலை வெளிச்சம் தோன்றும், நோய் என்ற இருள் மறைந்து தெய்வீக ஆரோக்கியம் என்னும் வெளிச்சம் உண்டாகும், அறியாமை என்னும் இருள் நீங்கி மறுமலர்ச்சி என்னும் பிரகாசம் தோன்றும், அடிமைத் தனம் கட்டுகள் போன்ற இருள் நீங்கி விடுதலை வாழ்வு துளிர்க்கும், பகைவர்களின் கோபம் என்ற இருள் நீங்கி ஜெயம் என்ற வெளிச்சம் உண்டாகும், சதி சர்ப்பனைகள் என்ற இருள் நீங்கி விடுதலை என்ற வெளிச்சம் உண்டாகும், வறுமை, சிறுமை போன்ற அவலங்கள் நீங்கி உயர்வு என்ற ஆசீர்வாதம் தோன்றும், நுகங்கள் யாவும் முறிக்கப்படும்,. கட்டுகள் யாவும் கழன்று போகும். அந்தகாரம் நீங்கிப்போகும், வெற்றி, மகிழ்ச்சி, பிரகாசம், வெளிச்சம் போன்ற ஆசீர்வாதங்கள் தோன்றும். அதற்காகவே இயேசு கிறிஸ்து மனு உரு கொண்டு நம்மிடையேத் தோன்றினார். அல்லேலூயா.

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர்நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். அவர் கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்திற்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதை செய்யும்"(ஏசா–9:6,7).

மேற் சொல்லப்பட்ட அனைத்து தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதலாக இயேசு என்ற பெயரில் மனு உரு கொண்டு கடவுள் பூமிக்கு இறங்கி வந்தார். இன்றைக்கும் அவர் பூமியை ஆளுகிறார். ஜனங்களை பரிசுத்தபடுத்தி வல்லமையை தந்து இருளை நீக்கி பிரகாசமுள்ள வாழ்க்கையை தருகிறார். நாமும் கூட இந்த கிறிஸ்மஸ் காலங்களிலே இருள் நீங்கி விடுதலையடைந்து வல்லமையைப் பெற்றுக்கொண்டு ஆண்டவருக்கு சாட்சியாக, அநேகரை கர்த்தருக்குள் வழி நடத்த ஒப்புக்கொடுப்போமாக.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட அருள் புரிவாராக.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரன்

சுவிசேஷ ஊழியர் சகோ. ஸ்டாலின்

# ஆழமான வேர்!

"யோசேப்பு கனிதரும் செடி, அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி அதின் கொடிகள் சுவரின் மேல் படரும்" (ஆதி 49:22)

ஒரு செடி அருமையான சுவையான ஏராளமான கனிகளைக் கொடுக்க வேண்டுமென்றால், அதனுடைய வேர்கள் ஆழமாய், நீரூற்றோடு தொடர்பு கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு வேர்கள் ஆழமாய் செல்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு செடியோ, மரமோ உறுதியாய் நிற்கும். யோசேப்பின் உள்ளத்தின் ஆழம் நீரூற்றாகிய கர்த்தரோடு தொடர்பு கொண்டிருந்தது. தன்னுடைய ஆசீர்வாதங்களுக்கு எல்லாம் கர்த்தரே ஊற்றுக்காரணர் என்பதை யோசேப்பு மறந்துவிடவில்லை, ஆகவே, மகா வறட்சியான காலத்திலும், செழிப்பாக கனி தந்து கொண்டேயிருந்தார்

உயரமான கட்டிடங்களைப் பார்க்கிறோம். அந்த கட்டிடத்தின் பெலன் எங்கே இருக்கிறது? ஆழமாக தோண்டப்பட்ட கன்மலையின் அஸ்திபாரமிடப்பட்டதிலேதான் இருக்கிறது. எரிந்துப் பிரகாசிக்கிற விளக்கின் இரகசிய திரி எண்ணெயாகிய பரிசுத்த ஆவியானவரிலே மூழ்கியிருக்கிறதிலேயே இருக்கிறது. அதுபோல கர்த்தருக்கு எழும்பிப் பிரகாசிக்கிறவர்களின் உள்ளத்தின் ஆழம் நீரூற்றாகிய கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசிக்கிறவர்களின் உள்ளத்தின் ஆழம் நீரூற்றாகிய கர்த்தரோடுகூட இடைவிடாத ஐக்கியம் கொள்கிறதில் இருக்கிறது.

கனிகொடுத்திலின் இரகசியம் என்ன? "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கி மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங். 1:2,3)

நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்"(வெளி. 22:2). ஆம், ஒரு மனிதனுடைய மேன்மை அவனுடைய அறிவிலோ, ஞானத்திலோ, சம்பாத்தியத்திலோ, இல்லை. உண்மையான ஆசீர்வாதம் அவன் தேவனோடு வைத்திருக்கிற ஆழமான ஐக்கியத்திலே இருக்கிறது.

யோசேப்புக்கு எத்தனையோ சோதனைகள் வந்தன. வாழ்க்கையில் போராட்டங்கள் வந்தன. போத்திபாரின் மனைவி ஆசை இச்சைகளை

காட்டியபோது, யோசேப்பு சொன்னது என்ன? நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என்றார். சிற்றின்பத்தை விரும்பி நீரூற்றோடு உள்ள ஆழமான ஐக்கியத்தை பாவம் ஒரு தடுப்பு சுவராக தடுத்துப் போடுவதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை.

ஒரு பக்தன் தன்னால் கனிதரும் வாழ்க்கை வாழ முடியவில்லையே என்று வேதனையோடு ஒரு மாம்பழ தோப்புக்குள் வந்தார். அப்படியே படுத்து விட்டார். அவருடைய தலைக்கு மேலாக, மாம்பழம் பழுத்து, வாசனை பரிமளித்து கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது கர்த்தர் அவரோடு பேசி, பார், இந்த பழத்தின் காம்பிலுள்ள நுண்துளைகள் எப்பொழுதும் வேரிலிருந்து உறிஞ்சி வரும் சத்துக்களுக்கு திறந்து வைத்திருக்கிறபடியால் மாம்பழத்துக்கு நிறத்தையும் சுவையையும் கொடுக்கிறது. அதுபோல உன்னுடைய உள்ளத்தின் ஆழத்தை தேவனுக்கு நேராய் திறிந்து வைத்தாயானால், பரலோக உச்சிதங்கள் உன்னை நிரப்பும். நீ கனி கொடுக்கிறவனாய் இருப்பாய் என்றார்.

நினைவிற்கு:– " சாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் (ஏசா 11:1)

## கிணற்றின் ஆழம்!

அந்த ஸ்திரி ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்" (யோவான் 4:11)

கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்த பின்பு , பல ஆழங்களில் நடத்திச் சென்று, தம்முடைய அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தினார். சிவந்த சமுத்திரத்தின் ஆழத்தில் அவர்கள் கர்த்தருடைய அதிசயங்களைக் கண்டார்கள். கர்த்தர் எப்படி தங்களுக்காக பக்தி வைராக்கியமாய் இருக்கிறார் என்பதைக் கண்டார்கள். அங்கே சிவந்த சமுத்திரத்தின் ஆழத்திலே பார்வோனையும், அவனுடைய சேனைகளையும் கவிழ்த்துப்போட்டார், அவர்கள் அமிழ்ந்து போனார்கள்.

"ஆழங்கள்" என்ற சொல், தேவனுடைய ஆலோசனை, தேவஞானம், தேவசித்தம் போன்ற பல கோணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலும் துரவின் ஆழம், கிணற்றின் ஆழம், நதியின் ஆழம், சமுத்திரத்தின் ஆழம் என்று நான்குவிதமான ஆழங்களுக்குள் கர்த்தர் தம் ஜனங்களை நடத்திச் செல்கிறதை பார்க்கிறோம்.

மேலே குறிப்பிட்ட வசனங்களில் சமாரியா ஸ்த்ரீயோடு, கிணற்றின் ஆழத்தைக் குறித்துப் பேசினார். "கிணறு" என்பது "ஆழமான உணர்வுகளைக்" குறிக்கிறது. சமாரியா ஸ்திரீ அன்புக்காக ஏங்கினாள்.

அன்பைத் தேடி பல ஆண்கள் பின்னால் அலைந்தும் மனசந்தோஷமும் திருப்தியும் ஏற்படவில்லை. இச்சை நிறைந்தவளாய், முடிவில் விபச்சாரத்திற்க்கு கடந்து சென்று விட்டாள்.

இயேசு மத்தியான வேளையிலே , அவளை சந்தித்து, உண்மையான திருப்திதரும் ஆழமான தேவ அன்பிற்க்கு அவளை வழிநடத்தினார். ஆகவே, யாக்கோபின் கிணற்றின் தண்ணீருக்கும், ஜீவத்தண்ணீருக்கும் உள்ள வித்தியாசத்தை அவளுக்கு காண்பித்தார். "இந்தக் கிணற்றின் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ, மறுபடியும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகது. நான் அவனுக்கு கொடுக்கும்மட்ம் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவக்காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என்றார் (யோவான் 4:14).

அதனுடைய அர்த்தம் என்ன? உலக சிற்றின்பங்கள் மேல் தாகமாய இருக்கிறவன், அவற்றால் திருப்தியடையமாட்டான். மதுபானம் குடிக்கிறவனை குடிபோதையின் ஆவி மறுபடியும் குடிக்கும்படி தள்ளிக்கொண்டுப் போகும். விபச்சாரக்காரன் அதனால் திருப்தியடைவதில்லை. உலகம் காண்பிக்கும் சுவைகளை நோக்கி ஓடுகிறவனுக்கு அதினால் திருப்தியடையாமல், நரகத்திலே ஐசுவரியானைப் போல கிடந்து, தாகத்தோடு ஒரு சொட்டுத்தண்ணீருக்காக ஏங்குவான்.

தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய உள்ளமோ, கர்த்தர் தரும் இரட்சிப்பாகிய ஜீவத்தண்ணீரின் மேல் தாகமாய் இருக்கட்டும். உலகப்பிரகாரமான கிணறும் ஆழமானது. ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறதைப்போல நீங்களும் தேவனுடைய பரிபூரணமான ஆழத்திற்குள் கடந்து செல்லுங்கள்.

சமாரியா ஸ்திரீயினுடைய தாகத்தைக் கர்த்தர் தம்முடைய கிருபையினால் சந்தித்தார். ஜீவத்தண்ணீரைக் கொடுத்தார். அவளுடைய மனக்கண்களைத் திறந்தபோது, அவள் சுவிசேஷகியாய் மாறிவிட்டார். நீங்களும் தெய்வீக திருப்தியடையும் கிறிஸ்துவண்டை வாருங்கள்.

நினைவிற்கு:- " நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள்" (ஏசா 12:3).

இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; (ஏசாயா 43:19)

## 2020 நவம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. கர்த்தருடைய பண்டிகை நாட்கள் ( லேவி 23:12)
2. முதற்பலனாகிய ஒரு கதிர்கட்டை ஆசாரியனிடம் கொண்டு வர வேண்டும்( லேவி 23:10)
3. ஒரு மரக்காலில் பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவில் புளிப்பாக பாகம் பண்ணபட்டதாய் ( லேவி 23:17)
4. நிலத்தின் பலனை சேர்த்து வைக்கும் நாள் லேவி 23:30)
5. இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணை ( லேவி 24:2)
6. மிருகத்துக்கு மிருகம் கொடுக்க வேண்டும் ( லேவி 24:18)
7. கிளை கழித்து பலனை சேர்க்கவேண்டும் ( லேவி 25:3)
8. அவன் இனத்தான் ஒருவன் ( லேவி 25:25)
9. பட்டணங்களை சூழ்ந்த வெளி நிலம் ( லேவி 25:34)
10. அந்நிய புத்திரரை ( லேவி 25:45)
11. நமஸ்கரிக்கும் பொருட்டு ( லேவி 26:1)
12. கர்த்தரின் கற்பனை, கட்டளைகளை ( லேவி 26:3-5)
13. அவர்கள் தேசத்தில் இருந்து புறப்பட பண்ணினார், நுகத்தடிகளை முறித்தார், நிமிர்ந்து நடக்க பண்ணினார் ( லேவி 26:13)
14. விக்ரகசிலைகளை ( லேவி 26:30)
15. இஸ்ரவேலரின் முன்னோர்கள் ( லேவி 26:45)

### 2020 நவம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. அனுஷா டினோ
Sis. ஷீபா அருண்இம்மானுவேல்

**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**
( சங்கீதம் 91:3)

"..உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்; ... " (எரே – 15:20)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோதரி . அனுஷா டினோ
செல்வி. நயோமி ராமர்
சகோதரி. விஜயா அந்தோனி சாமி
செல்வன். ஜோயல் ஜஸ்டின்
சகோதரி. ஷீபா ராணி வெங்கடேஷ்
சகோதரி. சசிகலா ராமர்
சகோ. பால் ராஜேஷ்
சகோதரி. கிளாடீஸ் பாப்பி சிவகுமார்
சகோதரி. சசிரேகா சதீஸ்குமார். நு
செல்வன். திரில் காட்ஸன்
சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
செல்வன்.ஸ்டீவ் ஆஸ்டின்
செல்வன். சுபாஷ் கிதியோன்
சகோதரி. சிவ குமாரி ஜஸ்டின்
செல்வன். ஜான்சன் ராஜவேல்
செல்வி. சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்

சகோ. சிவகுமார் (ஷாம் ஜெப குமார்)
செல்வன். பென்ஜமின் ராமர்
சகோதரி. ஜெனிட்டா ஜெபமலர் ஜெபசிங்
சகோ. விபின்
சகோ. ஆல்வின் முத்தையா
சகோதரி. ஜெனிஃபா ஜோஸ்வா
சகோ. பால் ராஜசேகரன் P
சகோ. எட்வின் சாம் ஞானதுரை
செல்வன். ராக்கின் ஹெரீஷ்
சகோ. அற்புத அலெக்சாண்டர்
செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
சகோதரி. ஜாஸ்மின் மெர்ஸி பென்சாம்
செல்வி. கவிதா கொம்மையன்
சகோதரி. ஃபாபியா ராஜேஷ்
செல்வி. ஸ்டீனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிராக வெங்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி / திரு. ஜினு
திருமதி / திரு. தாஸ்
திருமதி / திரு. கிறிஸ்டோபர்
திருமதி / திரு. வேலு ராமர்
திருமதி /திரு. ஸ்டீபன். T
திருமதி / திரு. பிரசாத் சுந்தரம்
திருமதி / திரு. ஜாண்சன்
திருமதி / திரு. ஆல்வின்
திருமதி / திரு. பிபின் ரிச்சர்ட்
திருமதி / திரு. ஜெபசிங்
திருமதி / திரு. பென்சாம்
திருமதி / திரு. பால் அறிவுச்சுடர்

# 2020 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/12/2020 | சகோ. ஐசக் துரை | சகோ. சுகுமார் |
| 13/12/2020 | சகோ. பிரசாத் சுந்தரம் | சகோ. எபிநேசர் |
| 20/12/2020 | சகோ. பிராங்ளின் | சகோ. ஸ்டீஃபன் |
| 27/12/2020 | சகோ. கிருஸ்டோபர் GTC | சகோ. ஐசக் துரை |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:30 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/12/2020 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ஜெகநாதன் |
| 11/12/2020 | சகோ. சுகுமார் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 18/12/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/12/2020 | சகோ.ஐசக் துரை | சகோ. கிருஸ்டோபர் |
| 31 /12/2020 | Watch night Service<br>Paryer house Fahaheel (10:30Pm to 1:30Am ) | |
| 01/01/2021 | சகோ.ஆரோக்கிராஜ் | சகோ. ஜெயசேகர் |

31 /12/2020 அன்று விழிப்பு இரவு ஜெபம்

இடம் : பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் இரவு 10:30 மணி முதல் அதிகாலை 1:30 மணிவரை

சபையோர் அனைவருக்கும் சபை செயற்குழு மற்றும்
ஊழிய பொறுப்பாளர்கள் சார்பாக
2020 ஆண்டு கிறிஸ்மஸ் மற்றும் 2021 ஆண்டு புத்தாண்டு
வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்

# 2020 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. பொருத்தனை பண்ணபட்டவர்கள் எதின்படி கர்த்தருக்குறியவர்கள்?

2. ஆசாரியன் பொருத்தனை ?பண்ணினவனை எப்படி மதிப்பான் ?

3. மீட்க்கபடாமல் வேறொருவனுக்கு விற்கபட்ட வயல் ------- வயல் ?

4. கர்த்தருக்கு சாபதீடாக நேர்ந்து கொண்டதை என்னென்ன செய்ய கூடாது ?

5. தசமபாகம் கொடுக்கிற ஆடுமாடுகளில் எவைகளை பார்க்க வேண்டாம் ?

6. கர்த்தருக்கு இடும் தகனபலிகளில் மகா பரிசுத்தமானது எது ?

7. முதற்பலன்களாக செலுத்தும் போஜனபலியை எப்படி கொண்டு வர வேண்டும் ?

8. சமாதான பலியாகிய ஆட்டு குட்டி அல்லது வெள்ளாடு எங்கே கொல்லப்படவேண்டும்?

9. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எங்கே தெளிக்க வேண்டும்?

10. பாவ நிவாரண பலிக்கான காளையின் எவ்வுறுப்புகளை சுட்டெரிக்க வேண்டும்? ?

11. பரிசுத்தமானதிலே தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை எப்படி செலுத்த வேண்டும் ?

12. செய்யத்தகாதென்று விலக்கபட்டதை செய்தவன் பாவநிவாரணபலியாக எதை செலுத்த வேண்டும் ?

13. போஜன பலியை எப்படி பாகம் பண்ண கூடாது ?

14. எது சமைக்கபட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும் ?

15. கர்த்தர் இஸ்ரவேலின் சமாதான பலிகளில், ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் எதை கொடுத்தார் ?

விடைகளை வருகின்ற 25-12-2020க்குள் (whatsApps #66015503-withName)அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீகள். விடைகள் "லேவியராகமம்-2,3,4,5,6,7.27,28 புத்தகத்தில் தேட-கண்டுபிடிக்கவும்

---தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7

## ஹெலன் ரோஸ்வியர் (1925)

ஹெலன் ரோஸ்வியர் 1925–ம் ஆண்டு ஹெர்ட்போர்ட்வியரில் ஹெஸ்லிபரி என்ற இடத்தில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தபோது, மெய்யான விசுவாசம் கொண்ட சில மாணவிகளின் அற்புதமான சாட்சியின் வாழ்க்கை இவரைச் சிந்திக்கும்படி செய்தது. இருபது வயதான இவர் தனது போலியான வாழ்க்கையை எண்ணிப் பார்த்து மனம் கலங்கினார். தானும் மெய்யான சமாதானத்தைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையால், கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, வேறெதிலும் அதிகக் கவனம் செலுத்தாது ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கத் துவங்கினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வசனம் அவரது இருதயத்தைத் தொட்டது. இவர் மனந்திரும்பி தனது மாய்மாலமான வாழ்க்கையை அறிக்கையிட்டு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஹெலன் காலப்போக்கில் தான் ஒரு மிஷனெரி ஆக வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். கிறிஸ்துவை நான் நேசிக்கத் துவங்கியபோதே அருட்பணி செய்ய வேண்டும் என்பதைத் தவிர மற்றவை அனைத்தும் இரண்டாம் பட்சமாக ஆகிவிட்டன என்று ஹெலன் குறிப்பிட்டுள்ளார். ஹெலன் தனது மிஷனெரி பாரத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தபோது அவர் அதிர்ச்சியடைந்தார். தன்னுடைய மகள் ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. தந்தையின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க ஹெலன் விரும்பவில்லை. எனவே அவர் மருத்துவ அருட்பணியாளராக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஜெபத்தில் காத்திருந்த அவர் அதுவே தன்னைக் குறித்த தேவ–னுடைய சித்தம் என்பதைத் திட்டமாக உணர்ந்தார்.

நியூஹாம் கல்லூரியில் படித்து, 1951–ம்ஆண்டு தனது 21–ம் வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். உடனடியாக ஆப்பிரிக்கா அருட்பணி மையத்துக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ஆப்பிரிக்க அருட்பணி மையம் இவரை காங்கோ நாட்டில் இபாம்பி என்ற இடத்துக்குச் செல்லும்படி சொன்னது. முன்பின் தெரியாத இடமாயிற்றே அவர்க–ளது மொழி தெரியாதே என்றெல்லாம் எண்ணித் தயங்காமல், தன்னை முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விசுவாசத்தோடு புறப்பட்டார். தனது 28–வது வயதில் ஆப்பிரிக்கா சென்ற டாக்டர் ஹெலன் இபாம்பியில் ஒரு சிறிய மருத்துவமனையைத் துவக்கினார். அவருக்கு உதவியாக

ஒருவருமேயில்லை. மொழிப் பிரச்சனையும் அவருக்குப் பெரிய இடையூறாக இருந்தது. போதுமான மருந்துகளும் கிடைக்கவில்லை.

இவ்வளவு பிரச்சனைகளும் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டன. ஹெலன் இன்னும் அதிகமாகத் தேவனைச் சார்ந்து செயல்படத் துவங்கினார். தன்னிடம் சிகிச்சைக்காக வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் அருளும் ஆவிக்குரிய குணமாகுதலைப் பற்றியும் ஜெபத்தோடு எடுத்துக்கூறினார். அதுவரை நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத பலர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 16 வயதான ஜாண் மங்காடிமா மூலம் தாய்மொழியாகிய ஸ்வாஹிலி மொழியை கற்றுக்கொண்டார். உள்ளூர் மொழியை நன்றாகப் பேசக்கற்றுக்கொண்ட ஹெலன் பயிற்சி பெற்ற உள்ளூர்வாசிகளின் துணையோடு 2 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் கட்டி முடித்தார். வசதியற்ற காட்டின் நடுவே 5 துணை செவிலியர்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஒரு பெரிய சாதனை–யே.

ஹெலன் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் புத்துணர்வைப் பெற்றிருந்த டாக்டர் ஹெலன் 1960–ம் ஆண்டில் ஆப்பிரிக்கா திரும்ப எண்ணியபோது காங்கோ நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டிருந்தது. நீண்ட காலமாக பெல்ஜியம் நாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த காங்கோ மக்கள் தங்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை அது.

காங்கோ நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் வன்முறைகளுக்கும் தப்பி பிழைக்கும்படி வெள்ளைக்காரர்கள் நாட்டை விட்டு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வேளையிலும் துணிவோடு அந்த நாட்டுக்குச் சென்றார். 3 வாரத்துக்குள் உள்நாட்டுபோர் காங்கோவில் துவங்கியது. மிஷனெரி பணித்தளங்கள் மூடப்பட்டன. மிஷனெரிகளைத் திரும்பி வரும்படி அருட்பணி மையங்கள் கட்டளையிட்டன. ஆனால் ஹெலன் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். அடுத்த நான்கு ஆண்டுகள் புரட்சி படை வீரர்களின் பல சித்திரவதைகளை விசுவாசத்தோடு சகித்துக்கொண்டார். இவர் தாக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். இறுதியாக சிம்பா படைவீரர்களால் கைது செய்யப்பட்டார். ஐந்து மாதங்கள் ஹெலன் சிறை வைக்கப்பட்டார். சிறை–யிலும் கிறிஸ்துவைப் பற்றி கூறி, தன்னுடைய சமாதானத்தை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். தன்னைப் பிடித்துச் சித்திரவதை செய்தவர்களின் மொழி–யை ஹெலன் அறிந்திருந்தபடியால், அவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றித் துணி–வோடு எடுத்துக் கூறினார்.

1964-ம் ஆண்டு இறுதியில் சர்வ தேசப்படையினர் ஹெலனை சிறையிலிருந்து விடுவித்தனர். புத்தாண்டு தினத்தன்று ஹெலன் விமானம் மூலம் இங்கிலாந்து திரும்பி வந்தார். ஹெலன் உருவாக்கின மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் கவனிப்பாரில்லாமல் நோயாளிகள் தவிக்கிறார்கள் என்றும் உருக்கமான கடிதமொன்றை ஜாண் மங்காடிமா எழுதி அனுப்பியிருந்தார். கடிதத்தைப் படித்த ஹெலன் அங்கே திரும்பிச் சென்று நிலைமையைச் சீர் செய்ய வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். தன்னை விசுவாசத்தில் பலப்படுத்தும்படி ஹெலன் தேவனுடைய உதவியை நாடினார். தனது 41-வது வயதில் 1966-ம் ஆண்டு ஹெலன் மறுபடியுமாக காங்கோ நாட்டுக்குத் திரும்பினார். டாக்டர் படிப்பை முடித்திருந்த ஜாண் மங்காடிமா, மருத்துவ மனையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்ததைக் கண்டு ஹெலன் மகிழ்ச்சியடைந்தார்.

ஒரு நற்செய்திப் பணி மருத்துவ மையத்தை உருவாக்கினார். இந்த மையத்தில் ஒரு மருத்துவப் பயிற்சிக் கல்லூரி அருட்பணி மருத்துவர்கள் வந்து செல்ல ஒரு விமான ஓடுபாதை மற்றும் வடகிழக்கு காங்கோ காட்டுப் பகுதியில் நான்கு சிறு மருத்துவமனைகள் ஆகியவற்றை அமைத்தார். பல்வேறு அருட்பணி அமைப்புகளின் மருத்துவமுயற்சிகளை ஒருங்கிணைப்பதும், பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அதிகாரத்தைப் பெறுவதுமே ஹெலனின் நோக்கமாக இருந்தது. விசுவாசத்துடன் செயல்பட்டார். பத்தாண்டுக்குள்ளாக ஹெலனின் 24 ஆண்டு காலக் கனவுகள் நிறைவேறும்படி தேவன் கிருபை செய்தார். நாடெங்கும் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட சிறு மருத்துவமனைகள் நிறுவப்பட்டன.

1971-ம் ஆண்டு டாக்டர் ஜாண் மங்காடிமாவை மருத்துவமனையின் இயக்குநராக ஹெலன் நியமித்தார். அதே நாள் பயிற்சிக் கல்லூரிக்கு அரசு அங்கீகாரமும் கிடைத்தது. அதற்காக தேவனைத் துதித்தார், இரண்டு ஆண்டுகள் கழித்து டாக்டர் ஹெலன் தனது 48-வது வயதில் காங்கோ நாட்டிலிருந்து விடைபெற்றார். காங்கோ நாட்டைவிட்டு வந்த போதிலும் ஹெலன் தனது அருட்பணி ஊழியத்தைக் கைவிடவில்லை. உலக அருட்பணி அமைப்பின் பிரதிநிதியாக உலகெங்கும் சென்று விசுவாசமுள்ள வாலிபர்களும், இளம்பெண்களும் அருட்பணி செய்ய முன் வரவேண்டுமென்று அறைகூவல் விடுத்து வருகிறார். சுவிசேஷத்தை மற்றவர்களும அறியச் செய்வதற்காகவே நாம் இந்தக் குறுகிய கால வாழ்க்கையைப் பெற்றுள்ளோம் என்பதே அவரது அறைகூவல்.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்.

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன் ( வெளி 2:7)

**எடுப்பு**

வாழ்க்கை பேராாட்த்தில் தூய வாழ்வில் நிலைத்திருக்கிறவன் எவனோ அவனுக்கு பரதீசின் விருந்து "ஜீவகனி" கிடைக்கும்

மோட்ச விருந்து கிடைக்கும்

அதியமான் என்ற ஒரு மன்னனுக்கு ஒரு நாவல் கனி கிடைத்தது அதை உண்டவர்கள் நீண்டநாள் அதாவது 100 வயதுக்கு மேல் சிஷழ்திருப்பர்களாம். அதனை அக்கால மன்னன் தன் மனைவி மக்களுக்கு கொடாமல் ஔவை பாட்டி எனும் கவிதை பாடும் மூதாட்டியை அழைத்து கொடுத்தானாம்.

இது சங்ககால செய்தி

மலையின்இருண்ட காட்டிற்குள் கிடைத்த அந்த நாவல் கனியை விட பரதீசின் ஜீவகனி எத்துணை வல்லமையுள்ளது. ஜீவகனியை உண்பவர்கள் சாவதில்லை.

திருமறையின் கடைசி நூலில் இப்படி ஒரு விருந்து

ஆனால் முதல் நூலாகிய ஆதியாகமத்தில் இரு கனியை புசிக்க கூடாது (ஆதி 2:16,17) என்று விலக்கி வைக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

**தொகுப்பு**

இங்கு ஒரு குறிப்பிட்ட கனியை புசிக்க கூடாது என்று விலக்கி வைக்கிறார்.

ஆனால் ஆதாம் ஏவாள் மீறலை காண்கிறோம் அவர்கள் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே அனுப்பி விட்டார்( ஆதி 3:22,23)

ஆதாம் ஏவாளை பார்த்து கர்த்தர் சொல்கிறார்.

இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது; ( ஆதி 9:3)

கொழுத்த உணவை விட எளிய உணவில் ஆரோக்கியம் இருப்பதை தானியேல் 1:12,13,15 வசனங்களில் காண்கிறோம்.

வேதத்தில் பின்பு இந்தக் கனிபற்றிப் பேசப்படவே இல்லை

ஏதேன் தோட்டமும் ஜீவகனியும் என்ன ஆனதோ தெரியாது ஆதியாகமத்திற்கு பின்பும் இறுதி தரிசன நூலுக்கு முன்பு வரும் 64 ஆகமங்களுக்கு ஜீவகனியை காணோம்.

விலக்கபட்ட அந்த கனியை பரதீசிற்குக் கொண்டு போய்விட்டீர் ஆதாம் ஏவாள் அவசரப்படாதிருந்தால் அது அவர்களுக்கும் கிடைத்திருக்கும் அவர்கள் அதை இழந்துவிட்டார்கள்.

இயேசு இந்தப் பூவுலகில் வாழ்ந்த காலத்தில் நீங்கள் அறியாதிருக்கிற ஓர் உணவு என்னிடத்தில் உண்டு என்றாரே அது என்ன?

இயேசுகிறிஸ்து பரலோகத்தில் ஏறிபோன போது இயேசு பெருமானுக்கே முதல் ஜீவக்கனி கொடுக்கப்படுகிறது.

பரலோகத்திலிருந்து அவர் நம்மை விருந்திற்கு அழைக்கிறார் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று உழைக்கும் மக்கள் அழைக்கிறார் வாழ்க்கை பேராட்த்தில் வெற்றி பெறுகிறவனுக்கு ஜீவ விருட்சத்தில் கனியை புசிக்க கொடுக்கிறார்.

**முடிப்பு :**

மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்ற வேதவசனத்தை எடுத்துச்சொன்ன இயேசு சுவாமிக்கு 40 நாள் பசியும் பறந்துபோய்விடுகிறது.

நீ ஆகாரப் பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை என்று வேதம் கூறுகிறது. மானுட ஓட்டம் ஜீவகனியைப் பெற்றுக்கொள்ளும் ஓட்டமாயிருந்தல் வேண்டும் பெற்று கொள்த்தக்கதாக ஓடி பெற்று பெறுவோம். ஆமென்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். நாம் இப்போது தேவனுடைய தெரிந்தெடுப்புக்கு அடையாளமான எரேமியா தீர்க்க தரிசியைப் பற்றி தியானிக்கலாம். எரேமியா–1:5–ல் தேவன் எரேமியாவை தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே அறிந்தேன் என்று கூறுகிறார். இந்த எரேமியாவின் வாழ்க்கையிலிருந்து கர்த்தர் தாம் தெரிந்து கொள்ளுகிற பிள்ளைகளுக்கு செய்கிற மூன்று காரியங்களைக் குறித்து தியானிக்கலாம்.

## 1. பரிசுத்தப்படுத்துகிற தேவன்

சங்கீ–51:5–ல் சங்கீதக்காரனாகிய தாவீது என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என்று கூறுகிறார். ஆனால் தேவன் எரேமியாவை நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் முன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணினேன் என்று எரேமியா–1:5–ல் கூறுகிறார். தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற யாவருக்கும் மிகவும் தேவையானது பரிசுத்தம். எபி–12:14–ல் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே. 1–பேது–1:16–ல் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று கர்த்தர் கூறுகிறார். எரேமியா ஒரு ஆசாரிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கர்த்தர் அவரை கர்ப்பத்திலே பரிசுத்தப்படுத்துகிறார். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியம் நாம் எவ்விதமான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் நாம் நம்மை பரிசுத்தமாய் காத்துக்கொண்டு கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்.

## 2. பலப்படுத்துகிற தேவன்

தேவன் எரேமியாவை ஜனங்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைக்க கட்டளையிடுகிறார். ஆனால் எரேமியாவோ ஆண்டவரே இதோ நான் பேச அறியேன். சிறு பிள்ளையாயிருக்கிறேன் என்று கூறுகிறார். வேதத்தில் நாம் பார்க்கும் போது மிகவும் சிறிய வயதில் தீர்க்கதரிசியானவர் இந்த எரேமியா. ஆனால் கர்த்தர் எரேமியாவிடம் நீ சிறு பிள்ளை என்று சொல்லாதே நான் உனக்கு கட்டளையிடுகிற எல்லாவற்றையும் நீ பேசுவாயாக என்று (எரேமி–1:6,7) கூறுகிறார். 2–கொரி–12:9–ல் என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்று கூறப்பட்டுள்ளது. நாமும் கூட

ஏதாவது ஒருவிதத்தில் பலவீனராய் சிறுமைப்பட்டவர்களாக இருந்தால் நம்மையும் பலப்படுத்தி பயன்படுத்த வல்லவராயிருக்கிறார்.

## 3. பாதுகாக்கிற தேவன்

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ராஜாக்களான யோசியா, யோயாக்கீம், சிதேக்கியா ஆகிய இவர்களுடைய ஆட்சி காலங்களில் தீர்க்கதரிசனம் உரைத்தவர். இவர் மூலம் தேவன் கூறிய தீர்க்கத் தரிசன வார்த்தைகள் பெரும்பாலும் யூதர்களுக்கு வரப்போகும் தேவ கோபாக்கினையைப் பறிறயதும், எருசலேமின் வீழ்ச்சியைப் பற்றியதும் ஆகும். எனவே தேசத்து ஜனங்களும், மூப்பர்களும் இவரை கொலைச் செய்ய வகை தேடினார்கள். அப்போது தேவன் எரேமியாவிடம் (ஏரேமி– 1:8) நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம். உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கூறி எரேமியாவைத் தேற்றுகிறார். அது மட்டுமில்லாமல் சில நேரங்களில் அடையாளங்களையும் காண்பித்தார் எனவே தான் எரேமியா எல்லா வேளைகளிலும் தேவனுடைய வார்த்தையை தைரியமாய் கூறினார்.

ஆம் இந்த எரேமியா தீர்க்கதரிசி மற்ற தீர்க்கதரிசிகளைப் போன்று வல்லமையானவரோ அல்லது பேச்சுத் திறமையானவரோ அல்ல. எளிதில் பயப்படக்கூடியவரும், மனமடிவாகிப் போகிறவருமாயிருந்த இவரை தேவன் தெரிந்து கொண்டு பரிசுத்தப்படுத்தி பலப்படுத்தி பாதுகாத்து தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினார். நம்மையும் தேவன் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே தெரிந்தெடுத்திருக்கிறார். ஆகவே நம்மையும் இப்படியாய் வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**ஜெபராணி விபின்**

சபையோர் அனைவருக்கும்! அஹமதியில் உள்ள பரிசுத்த பவுல் ஆலயம் கடந்த 27/12/2020 அன்று முதல் ஒரு சில கட்டுபாடுகளுடன் ஆராதனைக் –கென்று அனுமதிக்கபட்டுள்ளது. அதன்படி 15 வயதிற்குட்பட்ட சிறு பிள்ளைகள் சபையில் அனுமதிக்கபடாத நிலையில் அவர்களுக்காக அவர்களின் நலன் கருதி சபை வீட்டில் வெள்ளியன்று காலை 10 மணி முதல் 12 :30 வரை ஆராதனை நடைபெறுகிறது, குடும்பத்தினர் பிள்ளைகளுடன் வந்து ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளபடுகிறீகள்.மற்றும் அஹமதியில் உள்ள சபை ஆராதனையில் கலந்து கொள்ளும் சகோதர சகோதரிகள் பரிசுத்த பவுல் ஆலயத்து நிர்வாகத்தின் ஆணைப்படி நமது சபையின் செயலாளரிடம் தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறீகள் நன்றி


Happy
Christmas & Happy
New year 2021

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்- சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only